விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 347 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 15 வெள்ளிக்கிழமை (01.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பரீட்சைப் பெறுபேறு இன்று வெளியாகும்

(கொழும்பு)

க.பொ.த (சா) தரப் பரீட்சை 2022 பெறுபேறுகள் இன்று வெளியாகுமென பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந-7)

## வவுனியாவில் வயோதிபத் தம்பதி கொடூரமாக வெட்டிப் படுகொலை

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் நேற்று அதிகாலை வயோதிபத்தம்பதியினர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

செட்டிகுளம் பிரதான வீதியில் அமைந்துள்ள வியாபார நிலையமொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

செட்டிகுளம் பிரதான வீதியில் குறித்த தம்பதிகளின் மகன் வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வரும் நிலையில், அதற்குப் பின்னால் உள்ள தங்கும் இடத்தில் குறித்த தம்பதிகள் வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு வழமை போல அவர்களது 15

## பெற்றோல், டீசல் விலை குறைப்பு


(கொழும்பு)

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்குவரும் வகையில் எரிபொருட்களின் விலைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக 15

# பொலிஸ்மா அதிபராக தென்னக்கோன்

# அதிகாரவெறி கொண்ட கும்பலின் சதி

## கர்தினால் மல்கம் ரஞ்சித்



(கொழும்பு)

**பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதில் பொலிஸ்மா அதிபராக நியமித்தது ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பில் பலியானவர்களை அவமதிக்கும் செயலாகும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

புதிய பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பின் விளைவாக சுமார் 273 பேர் கொல்லப்பட்டனர் மேலும் 500 பேர் காயமடைந்தனர். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களைத் தடுக்கவில்லை எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தென்னக் 15

## இந்தியாவுக்குப் போட்டியாக இலங்கையில் சீனா முதலீடு

### அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

சீனாவின் எரிசக்தி நிறுவனமான சினோபெக் நிறுவனம் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பில் புதிய பெற்றோலிய சுத்திகரிப்பு ஆலையை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை ரூபாய் மதிப்பில் 120 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் சீன நிறுவனம் அம்பாந்தோட்டை துறை முகத்தில் முதலீடு 15

## கடன் வழங்கும் நாடுகளுடன் இலங்கை கொள்கை ஒப்பந்தம்

### ஐ.எம்.எப் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்காக வெளிநாட்டு கடன் வழங்கும் நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட கொள்கை ஒப்பந்தம் தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதில் இலங்கைக்கும் அதன் கடன் வழங்கும் நாடுகளுக்கும் இடையில் நிதி விதிமுறைகள் தொடர்பிலான கொள்கை ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. 15

### தொடரும் சீரற்ற காலநிலை


## யாழில் இதுவரை 298 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 85 குடும்பங்களினைச் சேர்ந்த 298 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் அதிகபட்சமாக சாவகச்சேரிப் பிரதேச செயலாளர் பிரிவில் 83 குடும்பங்களைச் சேர்ந்த 291 15

## தனியார் மயமாகிறதா இ.போ.ச?




10ஆம் பக்கம் பார்க்க

### பாராளுமன்றில் ஆற்றிய உரைக்காக

## ரொஷான் ரணசிங்க மீது வழக்குத் தொடர முடியாது

### சபாநாயகர் தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் உரையாற்றியமைக்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத்தொடர முடியாது என சபாநாயகர் மகிந்த 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து தக்க தருணத்தில் முடிவு

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பது குறித்து உரிய நேரத்தில் தீர்க்கமான முடிவெடுப்பேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச அண்மையில் தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும் போதே ஜனாதிபதி மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

இதன் போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர் நான் "ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் விமல் வீரவன்ச தீர்மானிக்க முடியாது.

அவரின் கருத்தைத் தூக்கி வீசுங்கள்" என்றும் அவர் குறிப்பிட்டார். ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நேற்று முன்தினம் நடத்திய கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் கூறினார் என்று அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட மாட்டார் என்றும், ஏதேனும் சர்வதேச அமைப்பொன்றில் முக்கிய பதவியொன்றைப் பெற்று ஓய்வுகாலத்தைக் கழிக்கவே ரணில் விக்கிரமசிங்க முற்படுவார் என்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கடந்த இரு நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார்.

விமலின் இந்தக் கருத்து தொடர்பில் ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் ஜனாதிபதி நடத்திய கலந்துரையாடலின் போது பேசப்பட்டது. இதன்போதே ஜனாதிபதி மேற்படி பதிலை வழங்கினார் என்று அந்த பிரஸ்தாப அமைச்சர் கூறினார். "ஆளும் கட்சியிலிருந்து எதிரணிப் பக்கம் பாய்ந்தவர்களும், எதிர்க்கட்சிகளில் இருப்பவர்களும் எனது அரசியல் பயணத்தை ஏதோவொரு வழியில் முடக்க முயற்சிக்கின்றனர். அவர்களால் எனது அரசியல் பயணத்தை ஒருபோதும் முடக்க முடியாது. நீங்களும் (ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள்) அவர்களின் பொறிக்குள் சிக்கிவிடாதீர்கள். அரசியலில் நான் தொடர்ந்து இருப்பதா? இல்லையா? என நான் தான் முடிவெடுப்பேன்." என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார் என்று அந்த அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ந-7)

### சுகாதார அமைச்சின் செயலாளராக கனகேஸ்வரன்



வட மாகாண சுகாதார அமைச்சின் புதிய செயலாளராக கனகேஸ்வரன் இன்று வெள்ளிக்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய அவர் நிர்வாக சேவை விசேட தரத்திற்குப் பதவி உயர்வு கிடைத்த நிலையில் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ந-7,104)

# கேக் விற்ற சிறுவன் பொலிஸாரால் கைது

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி.

(மட்டக்களப்பு)

பேக்கரியில் "கேக்" விற்ற சிறுவன் ஒருவர் மாவீரர் தினத்தை காரணம் காட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான கோவிந்தன் கருணாகரம் சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இந்த விவகாரத்தை சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

மட்டக்களப்பில் கடந்த வாரம் 10 இற்கும் மேற்பட்டவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எனக்கு தெரிந்த ஒரு சிறுவன் மட்டக்களப்பில் உள்ள பேக்கரியில் வேலை செய்கின்றார். அவர் கடந்த வாரம் கேக் ஒன்றை விற்றுள்ளார். அந்த கேக்கை வாங்கியவர் அதனை கொண்டு போய் அதில் வேலுப்பிள்ளை பிரபாகரன் என பெயர் எழுதியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸார் குறிப்பிட்ட பேக்கரிக்கு சென்று சி.சி.டிவி கமராவை ஆராய்ந்துள்ளனர். அதில் அந்த சிறுவன் கேக்கை மாத்திரம்தான் கொடுத்துள்ளார். அதில் அவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் என எழுதிக்கொடுக்கவில்லை.

ஆனால், அந்த பேக்கரியில் வேலைசெய்த குற்றத்துக்காக அந்த சிறுவன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்படியே செல்லுமாக இருந்தால் இந்த நாடு அழிந்து போகும் என்றார். (ந-7)

# மகளைக் கெடுத்த தந்தைக்கு 12 வருட கடூழியச் சிறை

வவுனியா - சுந்தரபுரம் பகுதியில் 14 வயது மகளுடன் தகாத முறையில் நடந்து கொண்ட தந்தைக்கு கடூழிய சிறைத்தண்டனை விதித்து நீதிபதி இளஞ்செழியன் தீர்பளித்துள்ளார். தந்தை மகளை தகாத முறைக்கு உட்படுத்தியமையினால் மகளுக்கு ஆண் குழந்தை ஒன்றும் பிறந்துள்ளது.

இந்நிலையில், எதிரியான தந்தைக்கு 12 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து நீதிபதி இளஞ்செழியன் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளார்.

குறித்த சம்பவம் 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இடம்பெற்றுள்ளது. தாய் வெளிநாடு சென்றிருந்த நிலையில் மூன்று தடவைகள் தந்தையினால் தகாத முறைக்கு உட்படுத்தப்பட்ட 14 வயது மகளான சிறுமி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்த போது கர்ப்பமாக இருந்தமை தெரியவந்துள்ளது.

குறித்த சிறுமிக்கு ஆண் குழந்தை பிறந்ததையடுத்து மரபணு பரிசோதனையின் போது எதிரியான தந்தையே பிறந்த ஆண் குழந்தைக்கு தந்தையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அரச சட்டத்தரணி தர்சிகா திருக்குமரநாதன் வழக்கை நெறிப்படுத்தியுள்ளார்.

இதற்கமைய, எதிரியான தந்தைக்கு 12 ஆண்டுகள் கடூழிய சிறை, 30 ஆயிரம் தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளதோடு, கட்டத்தவறும் பட்சத்தில் 3 மாத கால கடூழிய சிறை மற்றும் ஆறு இலட்சம் ரூபாய் நட்டஈடும், கட்டத்தவறும் பட்சத்தில் 18 மாத கால கடூழிய சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். (ந-7,250)


நீங்கா நினைவுகளுடன்

9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுந்தரலிங்கம் ராஜேஸ்வரி (ராசாத்தி)

மண்ணுலகம் 20.06.1948 விண்ணுலகம் 10.12.2014

திதி - சதுர்த்தி

ஆண்டுகள் ஒன்பது ஆனாலும் ஆறாது எம் துயரம்
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
நீங்காது உம் நினைவு எம் நெஞ்சில்
மண்விட்டு நீங்கி விண் ஏகினாலும்
எம் கண் விட்டு மறையாமல்
நெஞ்சில் தெலுவாக உறைந்திருப்பீர்
உங்கள் ஆன்மா அறுதலடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

(18055)

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

நீங்கா நினைவுகளுடன் கணவன் சு.சுந்தரலிங்கம்

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு. சிங்காரவேலு யோகநாதன்

(உரிமையாளர் – Ogesta)

திதி - துவாதசி

தோற்றம் : 24.02.1957

மறைவு : 01.12.2017

உழைப்பின் சிகரமாய்
உண்மையின் உறைவிடமாய்
உறவுகளுக்காக வாழ்ந்தவரே!
எம் குடும்ப வழிகாட்டியாக
எங்களுக்காகவே வாழ்ந்தவரே!
ஆண்டுகள் ஆறு கடந்தாலும்
அழியாது என்றும் உம் நினைவுகள்.

உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்

185/1, கில்னர் லேன்,

(18061)

021 221 6742


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த இரண்டு நாட்களில்

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்

# ஏழு பேர் கைது-அம்பிகா சற்குணநாதன்



**(கொழும்பு)**

**உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள இளைஞர் உட்பட 7 பேர் கடந்த 2 நாட்களில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.**

மாவீரர் நினைவேந்தல் நிகழ்விற்கு வாகனங்கள், ஜெனரேட்டர் மற்றும் ஸ்பீக்கர்களை வாடகைக்கு எடுத்ததாகவும் நவம்பர் 27 அன்று சிவப்பு மற்றும் மஞ்சள் கொடிகள் மற்றும் ஒலி பெருக்கிகளை கொண்டு சென்றதற்காகவும் கைது செய்யப்பட்டனர்.

இதில் சிலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் நாட்களில் மேலும் சிலரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாகனங்களை வாடகைக்கு எடுப்பது கூட பயங்கரவாத தடைச்சட்டத்தில் பயங்கரவாதமாக கூறப்பட்டுள்ளதாகவும் அம்பிகா சற்குணநாதன் குற்றம் சாட்டியுள்ளார். மேலும் நினைவு கூருபவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைப்பது, அரசாங்கத்தின் மீதான தமிழர்களின் அவநம்பிக்கையை மேலும் அதிகரிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)




(C-7739)


## கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

## மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி. **மதிவதனி கேதீஸ்வரன்**

சேவைக்காலம்: 16.03.1990-30.12.2023

வட்டக்கச்சி மண் தந்த மகத்தான மங்கையே
மதி போன்ற முகமுடைய மதிவதனமே
மகிழ்வாக கல்விதனை மாணவர்களுக்கு புகட்டி
அகவை அறுபதுதனில் ஆனந்தமாய் திகழ்ந்து
மணிவிழாக்காணும் மதிவதனியே
உங்கள் சேவையை வாழ்த்தி வணங்குகிறோம்


(C-7767)

பாடசாலைச் சமூகம்
கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன். சிவகுமாரன் புவிராஜ் (151 புள்ளிகள்)



செல்வி. தர்சிகா சிவரூபன் (150 புள்ளிகள்)



செல்வி. மதுர்ஷனா மகேஸ்வரன் (147 புள்ளிகள்)

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற எமது பாடசாலை மாணவர்களான செல்வன். சிவகுமாரன் புவிராஜ் (151 புள்ளிகள்), செல்வி. தர்சிகா சிவரூபன் (150 புள்ளிகள்), செல்வி.மதுர்ஷனா மகேஸ்வரன் (147 புள்ளிகள்) ஆகியோரையும் பரீட்சைக்குத் தோற்றிய அ.சங்கீர்த்தனன், செ.அஸ்வின், கே.கஸ்வினி, ர.வினுஷிகா, ம.ஆதி, ர.புகழவன், த.மிருஸ்ரினி, இ.அனுசாயினி, ஆ.ஜெனீபன், செ.அஜினன் ஆகிய மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய அதிபர் மற்றும் வகுப்பாசிரியர் திருமதி.விஜியந்தி சதீஸ்வரன் மற்றும் ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


வாழ்த்துவோர்:- பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.

(C-7746)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தேசியமட்ட தடகள போட்டி மிதுன்ராஜிற்கு இரண்டு தங்கங்கள்




தேசிய மட்ட தடகள போட்டியில் யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்ற பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ்.மிதுன்ராஜ் தட்டெறிதல், குண்டு போடுதல் போட்டிகளில் இரு தங்கப்பதக்கங்களை கைப்பற்றியுள்ளார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 34 ஆவது தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த 19 ஆம் திகதி கொழும்பு சுகதாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்ற பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ்.மிதுன்ராஜ் 44.80 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையைப் பதிவு செய்து தங்கப் பதக்கத்தையும், குண்டு போடுதல் போட்டியில் 14.39 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளார். (நி-5-6-90)

## தேசியமட்ட உயரம் பாய்தலில் வினோயன் தங்கப் பதக்கம்



தேசிய மெய்வல்லுநர் போட்டியில் யாழ்.மாவட்ட இளைஞர் சேவை மன்ற ஊர்காவற்றுறையைச் சேர்ந்த றூபன்விமல்ராஜ் வினோயன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

34 ஆவது தேசிய மட்ட தேசிய இளைஞர் விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சுகதாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம்பாய்தல் போட்டியில் யாழ். மாவட்ட இளைஞர் சேவைமன்ற ஊர்காவற்றுறையைச் சேர்ந்த றூபன் விமல் ராஜ் வினோயன் 1.90 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். (நி-5-6-90)

# மெக்ஸ்வெல் அதிரடி அவுஸ்திரேலியா வெற்றி

இந்திய அணிக்கு எதிரான மூன்றாவது இருபது-20 போட்டியில் அவுஸ்திரேலிய அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணி சார்பில் ருதுராஜ் கெய்க்வாட் 57 பந்துகளில் 123 ஓட்டங்களை குவித்தார். இதில் 7 ஆறு ஓட்டங்கள் மற்றும் 13, 4 ஓட்டங்களும் அடங்கும்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட களம் இறங்கிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 225 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இவ் அணி சார்பில் கிளென் மெக்ஸ்வெல் 48 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 104 ஓட்டங்களை பெற்றார்.

இதில் 8 ஆறு ஓட்டங்கள் மற்றும் 8 நான்கு ஓட்டங்களும் அடங்கும். அதன்படி 5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரை 2இற்கு 1 என இந்திய அணி கைப்பற்றி முன்னிலையில் உள்ளது. மேலும் குறித்த போட்டியில் கிளென் மெக்ஸ்வெல் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இணக்கப்பாடு

(கொழும்பு)

இலங்கை மற்றும் பாரிஸ் கிளப்பின் இணைத் தலைமையை கொண்டிருக்கும் இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் உத்தியோகபூர்வ கடன்குழு, கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் ஒன்றுக்கு இணங்கியுள்ளதாக பாரிஸ்கிளப் செயலகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டுடன் ஒத்துப்போகும் கடன் சிகிச்சையின் முக்கிய அளவுருக்கள் தொடர்பில், பாரிஸ் கிளப்பும் இலங்கையும் இணங்கிக்கொண்ட தாக அந்த செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த இணக்கப்பாடானது, சர்வதேச நாணய நிதிய பணியாளர்களை, நாணய நிதிய நிர்வாகக் குழுவிடம் இலங்கையின் கடன் வசதி ஏற்பாட்டின் முதல் மதிப்பாய்வை முன்வைக்க அனுமதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.அத்துடன் இந்த ஏற்பாட்டின் கீழ் இரண்டாவது நிதியளிப்பு ஒப்பதலுக்கான வழியைக் திறக்கும் என்று பாரிஸ்கிளப் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (நி-6)

# இலங்கையில் 6 ஆயிரம் பேர் எயிட்ஸ் நோயால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஆறாயிரம் பேர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் சுகாதார அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் சன்ன ஜயசுமண நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் செலவுத் தலைப்பு மீதான வரவு- செலவுத் திட்ட குழு விவாதத்தின் போதே ஜயசுமண மேற்கண்டவாறு தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் மூவாயிரத்தில் ஒருவர் எயிட்ஸ் நோயாளர் எனவும் தெரிவித்ததுடன் மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைய மசோதா பலவீனமாக உள்ளது. அந்த சட்டத்தில் தாமதமின்றி திருத்தம் கொண்டு வர வேண்டும்.

நாட்டு மக்களுக்கு குறைந்த விலையில் கிடைக்கும் வகையில் 50 மருந்தகங்களை ஆரம்பிக்குமாறு சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் எயிட்ஸ் நோய் அதிகரிக்கும் போக்கு காணப்படுகின்றது. தற்போது 6000 எயிட்ஸ் நோயாளிகள் உள்ளனர் எனவும் தெரிவித்தார். (நி-6)




# மரக்கறிகளின் விலை மேலும் அதிகரிப்பு



(கொழும்பு)

மழையுடனான காலநிலை காரணமாக சந்தையில் மரக்கறிகளின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இதன்படி பீன்ஸ், கேரட், எலுமிச்சை, பச்சை மிளகாய் உள்ளிட்ட அனைத்து பொருட்களின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது.

மரக்கறிகளின் விலை அதிகரிப்பு எதிர்வரும் நத்தார் பண்டிகை காலம் வரை தொடரும் என சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

# இராசிபலன்

01.12.2023
கார்த்திகை 15, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 4.37 மணிவரை

புனர்பூசம் மாலை 6.11 மணிவரை
சுபநேரம் -6.14-7.44 மணிவரை
இராகுகாலம்-10.44-12.14 மணிவரை

சந்திராஷ்டமம்- கேட்டை, மூலம்.

வளவன்

**மேஷம்** வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**கடகம்** வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மகரம்** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், நினைத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**ரிஷபம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாடு குதூகலம் தரும் சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்** மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கும்பம்** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்** நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**கன்னி** உறவினர் வழியில் இனிய சம்பவமொன்று இடம் பெறலாம், விரதங்களில் நம்பிக்கை கூடும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘திருமறைக் கலாமன்ற தினம்’

(யாழ்ப்பாண்ணம்)

கலைப்பணியில் 58 ஆண்டுகளை நிறைவு செய்து 59 ஆவது ஆண்டில் கால் பதிக்கும் திருமறைக் கலாமன்ற தினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு இல.17, மார்ட்டின் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைஞானசுரபிதியான இல்லத்தில் நன்றி வழிபாடு இடம்பெறும்.

தொடர்ந்து மு.ப 10.00 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ். மன்ற அலுவலகம் அருகில் அமைந்துள்ள கலைத்தூது மணி மண்டபத்தில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வும் கலை நிகழ்ச்சிகள் மாலை 4.00 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனங்கள், அண்மையில் திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்ட யாழ்ப்பாண தென்மோடி கூத்து மரபு ஓராள் ஆற்றுகைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு ,கலைஞர் கௌரவிப்பு என்பனவும்,சிறப்பு நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் “நொண்டி நாடகம்“ தென்மோடி நாட்டுக்கூத்தும் இடம்பெறவு ள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன், சிறப்பு விருந்தினராக இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் கி.கந்தவேள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

# சுவர் இடிந்து வீழ்ந்ததில் இளைஞன் படுகாயம்

(கரணவாய்)

திக்கம் வடிசாலை சுவர் இடிந்து வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அப்பகுதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனின் காலின் மீது சுவர் இடிந்து வீழ்ந்ததில் காய மடைந்த இளைஞனை சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.பெய்து வரும் மழை காரணமாக சுவர் ஈரலிப்பான தன்மையில் இருந்தமையால் இடிந்து வீழ்ந்து இருக்கும் என அப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (நி-6-60)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சட்டமாணி சிறப்புப் பட்டப்படிப்பு 2023/2024 கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்.

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் சட்டமாணி சிறப்புப் பட்டப்படிப்பு குறித்த கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது.விண்ணப்பிக்க விரும்புபவர்கள் நாளை சனிக்கிழமைக்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பிக்கலமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மனித வள முகாமைத்துவ உயர்சான்றிதழ் கற்கை நெறிக்கான 2023/2024 கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் குறித்த சான்றிதழ் கற்கைநெறிக்கான 2023/2024 கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது. விண் ணப்பிக்க விரும்புபவர்கள் நாளை சனிக்கிழமைக்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பட்டமேற்கல்விடிப்ளோமா கற்கைநெறிக்கான 2023/2024 கற்கை நெறிக்கான விண் ணப்பம் கோரல்.

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் நட த்தப்படும் குறித்த 2023/2024 கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது. விண் ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 14.12.2023 இற்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கற்கை நெறிகள் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் 021 222 3374 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ள முடியும். (நி-6)


# விநாயகர் விரத இலச்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

இருபாலை கோப்புராய் கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் விநாயகர் விரத இலட்சார்ச்சனை பெருவிழாவும் பிள்ளையார் கதைப்படிப்பும் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கஜமுகசங்கார தினத்தன்று இலட்சார்ச்சனை பூர்த்தியும் மறுநாள் திங்கட்கிழமை பஞ்சமுக விநாயகர் வீதி வலம் வரும் காட்சி இடம் பெறவுள்ளது. (நி-5-6)

# மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சிறுவர் அபிவிருத்தி குழுக்கூட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக்கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரனின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில், பாடசாலை இடைவிலகல் மற்றும் மீளிணைப்பு செயற்பாடு, சிறுவர் துஷ்பிரயோகம், பெற்றோரை இழந்த சிறுவர்களின் விபரங்கள் மற்றும் அவர்களுக்கான தேவைகள், பிரச்சினைகள், கிராமமட்ட சிறுவர் கண்காணிப்பு குழுக்களின் செயற்பாடுகள், சிறுவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெற்றுக்கொடுத்தல், சிறுவர் தொடர்பான பிரதேசமட்ட செயற்பாடுகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

எதிர்வரும் 20 ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் சிறுவர்களுக்கான விசேட பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களை பதிவு செய்யும் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள்,கைத்தொலைபேசிகள், மணல் மற்றும் இதர பொருட்கள் என்பன நீதிமன்ற வளாகத்தில் வைத்து நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. என யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)




(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது 2023 ஆம் ஆண்டுக்கான NVQ சான்றிதழ் முழு நேர கற்கைநெறிகளை நாளை சனிக்கிழமை அனைத்து பயிற்சி நிலையங்களிலும் ஆரம்பிக்கவுள்ளது.

இதன்படி தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர், கணனி படவடிவமைப்பாளர், முன்பள்ளி ஆசிரியர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், மின்னிணைப்பாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், வெதுப்பாளர், சமையலாளர், வரவேற்பாளர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனி பிரயோக உதவியாளர், குழந்தை பராமரிப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர், உதவி கணிய அளவியலாளர் (AQS) போன்ற கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 13.12.2023 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல.12/4 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் அல்லது எமது பிரதேச தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற் கொள்ள முடியும். அல்லது விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்கு 021 222 7949, 021 221 1793, 021 2057 047, 021 226 2550, 071 031 8737, 077 716 1955 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டும் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். தொழிற்பயிற்சி அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் கு. நிரஞ்சன் அறிவித்துள்ளார். (நி-6)

# போலி ஆவணம் தயாரித்து மோசடி செய்த நபர் கைது

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் திருடப்பட்ட முச்சக்கர வண்டிக்குப் போலி ஆவணங்களைத் தயாரித்து கிளிநொச்சியில் விற்பனை செய்த குற்றச்சாட்டில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் யாழ்.மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முச்சக்கரவண்டி ஒன்றின் ஆவணங்கள் யாழ்.மாவட்ட போக்குவரத்துத் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், அவை போலியானவை என்று இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் போலி ஆவணங்கள் தயாரித்து விற்பனை செய்த பிரதானமான கடற்படைச் சிப்பாயை யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான குழு கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (நி-6)

# போதனாவில் திருடிய இருவர் கைது பெறுமதியான தொலைபேசிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் கடந்த சில நாட்களாக மருத்துவமனைக்கு நோயாளர் மற்றும் நோயாளர்களைப் பார்வையிட வருபவர்களின் தொலைபேசிகளைத் திருடிய குற்றச்சாட்டில் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தொலைபேசி திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் திருட்டு தொலைபேசியினை வாங்கிய குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரையும் யாழ்.குற்றத் தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

மருத்துவ மனையில் கடந்த மூன்று நாட்களுக்குள் திருடப்பட்ட பெறுமதியான தொலைபேசிகளையும் மீட்டுள்ளனர்.

அண்மையில் போதனா மருத்துவமனையில் தொலைபேசிகளை யாராவது தொலைத்திருந்தால் நேரடியாக வந்து உரிய ஆவணங்களைக் காட்டித் திருடப்பட்ட தொலைபேசிகளை பெற்றுக் கொள்ள முடியும் என குற்றத்தடுப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (நி-6-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கோரல் -2024

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆலய முகாமைத்திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். புதிதாக விண்ணப்பிப்பவர்களாயின் **"முதலாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பிவைக்க வேண்டும். ஏற்கனவே 2023 ஆம் ஆண்டில் வழிபடுநர் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தமது உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்வதற்கு **"இரண்டாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். நேரில் வந்து பெறமுடியாதவர்கள் கீழே காட்டப்பட்ட மாதிரிக்கு அமைய படிவத்தை சுயமாகவே தயாரித்தும் விண்ணப்பிக்க முடியும். **விண்ணப்ப முடிவுக் காலம் 01.12.2023 தொடக்கம் 31.12.2023 பிற்பகல் 5.00 மணிவரையாகும்.**

கோவிலில் உபயகாராக இருக்கும் ஒருவர் பத்து ரூபாவுக்கான (ரூபா 10/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் உபயம் இல்லாதவர்கள் ஐம்பது ரூபாவுக்கான (ரூபா 50/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் பெற்று விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பி வைக்க வேண்டும். கட்டளைகள் யாவும் **"பொருளாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** எனும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். விண்ணப்பத்தை பூரணப்படுத்தி அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேற்பாகத்தில் **"வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2024"** எனக் குறிப்பிட்டு **"செயலாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரில் கையளிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியினுள் சேர்க்கலாம். விண்ணப்பங்கள் சமாதான நீதவான், இலங்கை நிர்வாகசேவை உத்தியோகத்தர், அரசாங்க பாடசாலை அதிபர், இந்து மதகுரு, கிராமசேவை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் உள்ளடங்கலாக அவரின் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்டாம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

• மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021-432 3440/ 021-432 3447 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

**ந.மோகனரூபன், செயலாளர், அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.**

முதலாம் அட்டவணை - (படிவம் 01)

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2024 ஆம் ஆண்டு

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :- ..............................................................
2. பிறந்தநாள்:- ........................................................
3. இந்துசமயத்தவரா?:-................................................
4. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் வழிபடுபவரா?:-.....................

5. நீங்கள் உறுப்புரிமை 03(2)(ஏ) அல்லது 03(2)(பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின், இந்த ஆண்டு கோவிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்களைத் தருக.

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச்சீட்டின் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விபரம் |
|---|---|---|---|
| | | | |

6. இலங்கை முகவரி:- ....................................
7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை / தபாற் கட்டளையின் விபரம்:-

காசுக்கட்டளை /த.க இல ................................ அலுவலகமும் வழங்கிய நாளும் ........................................... தொகை ...................

8. நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.
9. இந்தக் கோவிலில் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ அல்லது குருவாகவோ நீங்கள் உள்ளீர்களா?
10. இக் கோவிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விபரங்களையும் தருக.

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துவதோடு, வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

..........................................
விண்ணப்பதாரர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் ............ ஆம் ஆண்டு................. மாதம்..:.......... நாளன்று.............. என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதிசெய்கின்றேன்.

என் முன்னிலையில்

..........................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு:- விண்ணப்பதாரின் ஒப்பம் சமாதான நீதவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்டாம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2023.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இரண்டாம் அட்டவணை - (படிவம் 02)

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் 2024 ஆம் ஆண்டு

செயலாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.
அன்பார்ந்த ஐயா,

வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்

................ ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான எனது சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன்........................................... அஞ்சலகத்தால் ......................... ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட ..................................... இலக்கங்கொண்ட காசுக்கட்டளை/ தபாற் கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர்: - ..........................................
முகவரி:- ..............................................
எனக்குள்ள உபயம்:- ......................................
உபயக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம்:- ..............................................

..............................
உறுப்பினர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் ............ ஆம் ஆண்டு................. மாதம்............ நாளன்று.............. என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதிசெய்கின்றேன்.

என் முன்னிலையில்


..............................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு:- விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்டாம்ட்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2023.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (சி-7768).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற கிஸ்ஸிங்கர் மறைவு



(வோஷிங்டன்)

அமெரிக்க முன்னாள் வெளியுறவுத்துறை செயலாளரும், அமைதிக்கான நோபல் பரிசு வென்றவருமான ஹென்றி கிஸ்ஸிங்கர் தனது 100ஆவது வயதில் காலமானதாக அவரது நிறுவனம் அறிவித்துள்ளது.

அவர் நிறுவிய அரசியல் ஆலோசனை நிறுவனமான கிஸ்ஸிங்கர் அசோசியேட்ஸ் தனது அறிக்கையில், ஜெர்மனியில் பிறந்த கிஸ்ஸிங்கர் கனெக்டிகட்டில் உள்ள அவரது வீட்டில் உயிரிழந்ததாக தெரிவித்துள்ளது.

அவரது பல தசாப்த கால வாழ்க்கையில், கிஸ்ஸிங்கர் அமெரிக்க வெளியுறவுக்கொள்கையில் முக்கிய மற்றும் பல நேரங்களில் சர்ச்சைக்குரிய கதாபாத்திரமாக திகழ்ந்தார். (நி-6)

## ரஷ்ய எல்லையிலுள்ள இறுதிக் கடவையை மூடிய பின்லாந்து

(மொஸ்கோ)

ரஷ்ய எல்லையில் உள்ள இறுதிக் கடவையை பின்லாந்து மூடியுள்ள நிலையில், இதனை ரஷ்யா கடுமையாக கண்டித்துள்ளது.

ரஷ்ய 'கலப்பின நடவடிக்கையின்' இலக்காகிவிட்டதாக பின்லாந்து கூறுகிறது. இதனிடையே இந்த மாதம் 900 புகலிடக் கோரிக்கையாளர்கள் எல்லையைத் தாண்டியுள்ளனர்.

இந்த வருகையானது முந்தைய எண்ணிக்கையை விட வியத்தகு அளவில் அதிகமாக உள்ளது மற்றும் பின்லாந்தின் எல்லைக் காவல்ப்படை, ஒகஸ்ட் 2023 ஆம் ஆண்டுக்கு முன் ரஷ்ய அதிகாரிகள் வெளிநாட்டு குடிமக்கள் தேவையான விசாக்கள் இல்லாமல் அந்தப் பகுதிக்கு பயணிப்பதைத்தடை செய்தனர்.

பின்லாந்து ரஷ்யாவுடன் 1,340 கி.மீ (830 மைல்) எல்லையைப் பகிர்ந்து கொண்டது மற்றும் அதன் ஏழு தென்கிழக்கு எல்லைக் கடப்புகளை கடந்த வாரம் மூடியது. அதன் தொலைதூர வடக்குக் எல்லை தற்காலிகமாக மூடப்படும் என்று அறிவித்தது.

ஒரு ரயில்-சரக்கு பாதை திறந்தே இருக்கும் மற்றும் கோட்பாட்டில் இது முழுமையான பணிநிறுத்தம் அல்ல என்று எல்லைக் காவல் படை தெரிவித்தது. (நி-6)

## கடலில் வீழ்ந்து விபத்திற்குள்ளான விமானம்

(டோக்கியோ)

தென்மேற்கு ஜப்பானில் உள்ள யகுஷிமா தீவில் 6 பேருடன் சென்ற அமெரிக்க இராணுவ விமானம் விபத்துக்குள்ளானது.

விபத்து நடந்த இடத்திற்கு அருகில் ஒருவர் இறந்து கிடந்ததாக ஜப்பான் கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

ஜப்பானின் NHK ஒளி பரப்பு நிறுவனம், CV-22 Osprey ஹைப்ரிட் விமானம் யாகுஷிமா விமான நிலையத்தில் தரையிறங்க முயன்ற வேளை ஒரு இயந்திரத்தில் தீப்பிடித்ததாகக் கூறியது. எனினும் இதுதொடர்பில் அமெரிக்க தரப்பிலிருந்து கருத்து எதுவும் வெளிவரவில்லை.

ஆஸ்ப்ரே விமானம், ஹெலி கொப்டர் போன்று புறப்பட்டு தரையிறங்கக் கூடிய ஹைபிரிட் விமானம் ஆகும்.

இந்த வகை விமானங்கள் அமெரிக்க ஆயுதப்படைகளின் ஒரு பிரிவான மரைன் கார்ப்ஸ், கடற்படை மற்றும் விமானப்படையில் பயன்படுத்தப்படுகின்றன. (நி-6)

# செயற்கைக்கோள்

# நிபந்தனையின்றி பேசத் த

# பேச்சுவார்த்தை தேவையில்

(பியாங்யாங்)

**ராஜதந்திர ரீதியான உறவை மேம்படுத்திக் கொள்ள வடகொரியாவிற்கு அமெரிக்கா அழைப்பு விடுத்திருந்த நிலையில் அந்த அழைப்பை நிராகரித்தது வடகொரியா.**

வடகொரியாவின் அதிபராக இருப்பவர் கிம் ஜாங் உன். இவரது சகோதரி கிம் யோ ஜாங். இவர் வடகொரியாவின் அதிகாரமிக்க தலைவராக உள்ளார். சமீபத்தில் வடகொரியா உளவு செயற்கைக்கோளை செலுத்தி அதன் மூலம் வெள்ளை மாளிகை, பென்டகன் படத்தை பெற்றதாக தெரிவித்திருந்தது.

இதனால் பாதுகாப்பு குறித்து அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் நாடுகள் கவலை தெரிவித்துள்ளன. கொரியா ஒப்பந்தத்தின் ஒரு பகுதியை தென்கொரியா சஸ்பெண்ட் செய்துள்ளது. இந்த நிலையில்தான் ராஜதந்திர அளவிலான உறவை மேம்படுத்திக்கொள்ள அமெரிக்கா பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்திருந்தது.

ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தின்போது, ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதர் லிண்டா தாமஸ்-க்ரீன் பீல்டு வடகொரியா உளவு செயற்கைக் கோளை ஏவியது பொறுப்பற்றது. சட்டவிரோதமானது. அண்டை நாடுகளுக்கு மிரட்டல் விடுவதாக உள்ளது என விமர்சித்திருந்தார்.

மேலும், எந்தவித நிபந்தனை இல்லாமல் பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் நேரத்தையும் பேசக்கூடிய கருத்தையும் வடகொரியாவே முடிவு செய்து கொள்ளலாம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

## இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தம் மீண்டும் நீடிப்பு பிணைக் கைதிகளை விடுவிப்பதில் உடன்பாடு எட்டும் வரை தொடர வாய்ப்பு



(காசா)

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான தற்காலிகப் போர் நிறுத்தம் மேலும் தொடரும் என்று போர் நிறுத்ததுக்கான ஒப்பந்தம் முடிவடைவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பாக இருதரப்பும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான மத்தியஸ்தர்களின் தொடர் செயற்பாட்டு முயற்சிகள் மற்றும் ஒப்பந்தங்களின்படி போர் இடைநிறுத்தம் தொடர்கிறது என்று [illegible]வித்துள்ளது. ஆனால் எவ்வளவு நாளைக்கு இது தொடரும் என்ற காலக்கெடு கூறிப்பிடப்படவில்லை. இதனிடையே தெளிவான விபரங்கள் எதுவும் குறிப்பிடாமல், ஏழாவது நாளைக்கு போர் நிறுத்தம் நீட்டிக்க ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று ஹமாஸ் தரப்பும் தெரிவித்துள்ளது.

கடந்த அக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்த ஹமாஸ் தீவிரவாதிகள் 1,200 பேரை சுட்டுக்கொன்றதுடன், 240 பேரை சிறைபிடித்தனர். இதற்கு பதிலடியாக, இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 13,300 இற்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இந்நிலையில், கட்டார் நாட்டின் சமரச முயற்சியாலும், அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் ஆதரவுடன் பல வாரங்களாக நடந்த பேச்சுவார்த்தையின் பலனாகவும் இருதரப்புக்கு இடையில் கடந்த 24 ஆம் திகதி தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு அமுலுக்கு வந்தது.

இந்த நிலையில் போர் நிறுத்தத்தின் ஆறாவது நாளான நேற்றுமுன்தினம் புதன்கிழமை 10 இஸ்ரேலியர்கள் உட்பட 16 பிணைக் கைதிகளை ஹமாஸ் தரப்பு விடுவித்தது. மீதமுள்ள ஆறுபேரில் டச்சு நாட்டைச் சேர்ந்த மைனர் ஒருவர். மூன்று ஜேர்மானியர்கள், ஒருவர் அமெரிக்கர். இதற்கிடையில், இரண்டு ரஷ்யர்கள், தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த நான்கு பேர் போர் நிறுத்த ஒப்பந்த கட்டமைப்புக்கு அப்பாற்பட்டு விடுவிக்கப்பட்டனர். தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட நவம்பர் 24 ஆம் திகதியில் இருந்து, 97 இஸ்ரேலியப் பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. இன்னும் 145 பிணைக் கைதிகள் காசா பகுதிக்குள் இருப்பதாக இஸ்ரேஸ் இராணுவம் தெரிவித்துள்ளது குறிப் பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ர் விவகாரம்
## துயார்-அமெரிக்கா
## ல்லை-வடகொரியா





ஆனால், கிம் ஜாங் உன்னின் சகோதரியான கிம் யோ ஜாங் அமெரிக்காவின் அழைப்பை நிரா கரித்துள்ளார்.

செயற்கைக்கோள் மூலம் மிரட் டல், மற்ற ஆயுதங்களை செயற் படுத்துதல் போன்ற அமெரிக்கா வின் குற்றச் சாட்டை மறுத்துள் ளார். மேலும், "ஒரு சுதந்திர அர சின் இறையாண்மை ஒரு போதும் பேச்சுவார்த்தை களுக்கான நிகழ்ச்சி நிரலாக இருக்க முடியாது. எனவே, வடகொரியா அந்த நோக் கத்திற்காக ஒரு போதும் அமெரிக்காவுடன் நேருக்கு நேர் பேச்சுவார்த்தையில் ஈடுபடாது." என அவர் தெரிவித்தார். (நி-6)

## காசாவுக்கு வந்து இஸ்ரேலின் நாசவேலைகளைப் பாருங்கள்

### எலான் மஸ்கிற்கு அழைப்பு விடும் ஹமாஸ்



(காசா)

காசா எல்லைப்பகுதிக்கு வந்து, இஸ்ரேல் செய்திருக்கும் நாச வேலைகளையும் பாருங்கள் என உலகின் முன்னணிபணக்காரர் களில் ஒருவரான எலான் மஸ்க்-க்குஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

"காசா எல்லைக்கு வந்து, காசா மக்களுக்கு எதிராக செய்யப்பட்டுள்ள அழிப்பு நடவடிக்கைகளை கண்கூடாக பார்த்து தெரிந்து கொள்ள அவரை நாங்கள் அழைக்கிறோம். 50 நாட்க ளுக்குள் பாதுகாப்பில்லா காசா மக்கள் வீடுகளின் மீது 40 ஆயிரம் தொன் வெடிபொருட்களை இஸ்ரேல் கொட்டித் தீர்த்துள்ளது."

"மேலும் இஸ்ரேல் உடனான உறவை நீட்டிப்பது குறித்தும், அவர்களுக்கு ஆயுதங்களை வழங்குவது குறித்தும் அமெ ரிக்கா பரிசீலனை செய்ய வேண் டும்," என்று ஹமாஸ் அமைப் பின் மூத்த தலைவர் ஒசாமா ஹம்டன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இஸ்ரேலுக்கு சென்றிருந்த எலான் மஸ்க், ஹமாஸ் நடத்திய தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்திருந் ததுடன் மேலும் வெறுப்பு பரவு வதை தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளை யும் எடுப்பதாக எலான்மஸ்க் கூறி யமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## உலகின் எட்டாவது அதிசயமாக கம்போடியாவின் 'அங்கோர்வாட்'

(கம்போடியா)

கம்போடியாவின் வடக்கு மாகாணமான சீம் ரீப்பில் அமைந்துள்ள அங்கோர்வாட் கோயில் உலகின் 8 ஆவது அதிசயமாக அறிவிக்கப்பட்டுள் ளது.

அங்கோர்வாட் தென்கிழக்கு ஆசியாவின் மிக முக்கியமான தொல்பொருள் தளங்களில் ஒன்றாகும். சுமார் 400 கி.மீ சதுர மீற்றர் பரப்பளவில் அமைந் துள்ள உலகின் மிகப்பெரிய மத வழிபாட்டுத் தலமாக அங்கோர் வாட் கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது.

கம்போடியாவில் அமைந் துள்ள அங்கோர்வாட் கோயில் உலகில் அதிகமான பயணி களை ஈர்க்கும் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக உள் ளது.

கம்போடியாவின் மையப் பகுதியில் உள்ள அங்கோர்வாட், இத்தாலியின் பாம்பீயைப் பின் னுக்குத் தள்ளி உலகின் எட்டா வது அதிசயமாக மாறியுள்ளது.



ஒவ்வொரு ஆண்டும் பாம் பீக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளைவிட அங்கோர் வாட்டுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள்தான் அதிகம்.

அங்கோர்வாட் கோவில் யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளங்களில் ஒன்றாகும். இது ஆண்டுதோறும் உலகம் முழு வதிலுமிருந்து லட்சக்கணக் கான பார்வையாளர்களை ஈர்க் கிறது. இது முதலில் இந்துக்க ளின் கடவுளான விஷ்ணுவின் கோவிலாகக் கட்டப்பட்டது.

பின்னர் புத்த மதத்தின் முக்கிய கோவிலாக மாறியது. அங்கோர் என்றால் எட்டுக் கைகளையுடைய விஷ்ணுவைக் குறிக்கும். 12 ஆம் நூற்றா ண்டில் இரண்டாம் சூர்யவர் மன் என்ற மன்னரால் கட்டப் பட்டது. மன்னன் இந்து மதத் திலிருந்து பௌத்த மதத்திற்கு மாறியிருப்பதை கோவில் சுவர் களிலும் சிற்பங்களிலும் காண முடிகிறது. (நி-6)


## பாப்பரசரின் துபாய் பயணம் ரத்து

(வத்திக்கான்)

ஐக்கிய நாடுகளின் கால நிலை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஐக்கிய அரபு இராச்சியம் செல்ல விருந்த பாப்பரசர் போப் பிரான்சிஸ் அந்த விஜய த்தை இரத்து செய்துள்ளார்.

காய்ச்சல் மற்றும் நுரை யீரல் பாதிப்பில் இருந்து மீண்டு வரும் பாப்பரசர் மருத்துவர்களின் உத்தர வின் பேரில் ஓய்வு பெறுவ தால் இந்த விஜயத்தை இரத்து செய்துள்ளதாக வத் திக்கான் தெரிவித்துள்ளது.

86 வயதான பாப்பரசர் பிரான்சிஸ் நாளை சனிக் கிழமை துபாயில் நடை பெறும் கட்சிகளின் மாநாட் டில் உரையாற்றுவதற்காக இன்று வெள்ளிக்கிழமை புறப்படவிருந்தார்.



அவ்வாறு சென்றிருந் தால் ஐ.நா காலநிலை மாநாட் டில் உரையாற்றிய முதல் பாப்பரசர் என்ற பெருமையை அவர் பெற்றிருப்பார். (நி-5-6)

## ஜெருசலேமில் துப்பாக்கிச் சூடு இருவர் பலி, எட்டு பேர் காயம்



(ஜெருசலேம்)

ஜெருசலேமில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 8 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இரண்டு பாலஸ்தீன ஆயுத தாரிகள் பேருந்து நிலைய த்தை குறிவைத்து துப்பாக் கிச் சூடு நடத்தியுள்ளனர் என இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் ஜெருச லேமில் இடம்பெற்ற கொடூ ரமான வன்முறையை கண் டிப்பதாக இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதுவர் தெரி வித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் மயமாகும் இ.போ.ச?

(கொழும்பு)

எதிர்வரும் 2024ஆம் ஆண்டளவில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இலாபம் இல்லை என்றால், அதனையும் தனியார் மயமாக்க வேண்டியிருக்கும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தனியார் மயமாக்கலின் அபாயத்தைத் தவிர்ப்பதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றப்பட வேண்டுமென அமைச்சர் குறிப்பிட்டார்.

வரும் ஆண்டில் பல டிஜிட்டல் திட்டங்களை செயற்படுத்த இலங்கை போக்குவரத்துச் சபை திட்டமிட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-6)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுப்பு

## நுகர்வோர் அதிகார சபை அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படும் என நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி வரை இந்த சோதனைகள் நடைபெறவுள்ளதுடன் விடுமுறை நாட்களிலும் அதிகாரிகளுக்கு கடமைகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி சாந்த நிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அதேவேளை வாடிக்கையாளர்களுக்கு உற்பத்திப் பொருட்களின் விலைகளை காட்சிப்படுத்துவது அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)

# தேங்கிக் கிடக்கும் சாரதி அனுமதிப்பத்திரங்கள்

(கொழும்பு)

அச்சுப்பொறிகள் இல்லாத காரணத்தால் வழங்கப்பட முடியாமல் குவிந்து கிடக்கும் அனைத்து சாரதி அனுமதிப் பத்திரங்களையும் எதிர்வரும் 6 மாதங்களில் விநியோகிக்க முடியும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதுவரை 9 லட்சம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிட முடியாத அளவிற்கு குவிந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்குத் தேவையான மூன்று அச்சுப்பொறிகள் கடந்த திங்கட்கிழமை தமக்கு கிடைத்ததாகவும் அதன்படி இந்த வாரத்தில் இருந்து அச்சிடும் நடவடிக்கை தொடங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.(நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 300 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 800 | 800 |
| தக்காளி | 550 | 550 | 500 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 150 | 120 |
| கோவா | 400 | 330 | 350 | 500 |
| கரட் | 350 | 450 | 350 | 500 |
| பூசணி | 100 | 120 | 100 | 120 |
| புடோல் | 250 | 250 | 200 | 250 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 300 |
| சின்ன வெங்காயம் | 400 | 250 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 260 | 350 |
| பாகற்காய் | 650 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 230 | 250 | 200 | 320 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 200 |
| பயற்றங்காய் | 600 | 650 | 500 | 600 |
| லீக்ஸ் | 350 | 250 | 350 | 400 |
| பீற்றூட் | 350 | 350 | - | 600 |
| கறிமிளகாய் | 700 | 800 | 750 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 1000 | 600 | 1000 |
| போஞ்சி | 650 | 700 | 650 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 650 | 350 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 200 | 200 |
| தேசிக்காய் | 1000 | 1200 | 1000 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 450 | 450 | 450 | 550 |
| வெங்காயப்பூ | — | - | - | - |
| முள்ளங்கி | 120 | 200 | - | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 200 | 50 | 60 |
| ஈரப்பலா | 200 | 200 | - | 240 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2978

மிதுனா




சங்கீதா




கோபினா




தமன்




கார்த்திக்




தனேஜ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் கழிவகற்றல் நடவடிக்கைகள் நிறுத்தம்

## மக்கள் அசௌகரியம்

(மன்னார்)


மன்னார் நகரசபைக்குச் சொந்த மான மலக்கழிவு மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தில் எவ்வித கழிவுகளும் கொட்டக்கூடாது என கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் கடந்த 23 ஆம் திகதி பிறப்பித்துள்ள தடை உத்தரவுக்கு அமை வாக நேற்று முன்தினம் முதல் மன்னார் நகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வந்த மலக்கழிவு மற்றும் திண்மக் கழிவு அகழ்வு நடவடிக்கைகள் நிறுத் தப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் நிலத்தடி நீர் மாசு படுவதாகவும் பறவைகள் சரணாலயத் திற்கு உரிய இடம் என கோரி கடந்த 8 ஆம் திகதி கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் கொழும்பில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று வழக்குத் தாக்கல் செய்தமைக்கு அமைவாக குறித்த தடை விதிக்கப்பட்டது.

திண்மக்கழிவு மற்றும் மலக் கழிவு அகழ்வு நிறுத்தப்பட்டமையினால் மன் னார் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விதிக் கப்பட்டுள்ள தடை உத்தரவை மீளப்பெற்றுக்கொள்ள மன்னார் நகர சபை எதிர்வரும் திங்கட் கிழமை கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய உள்ளனர். (நி-6-285)

# கடலட்டை பிடித்த 12 பேர் மன்னாரில் கைது



(மன்னார்)

மன்னார் சிலாவத்துறை - கொண்டச்சிக்குடா கடல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளை பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட 12 பேர் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமேற்கு கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது குறித்த இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது 04 படகுகள் ஆயிரத்து 670 கடலட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட 12 பேர் உட்பட கடலட்டைகள் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறை கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்தாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (நி-6)

# உலக கடற்றொழிலாளர் விழா

(குருமன்காடு)

குருநகர் கடற்றொழிலாளர் அபி விருத்தி சங்கம் நடத்தும் உலக கடற் றொழிலாளர் விழா இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தொழிலாளர் இளைப்பாறு மண்டபத்தில் அச் சங்கத்தின் தலைவர் யூலியன் சகாயராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சரும் மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார். (நி-6-106)

# கலாசாலையில் ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஒளிவிழா நிகழ்வு இன்று வெள்ளி காலை 9 மணிக்கு கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் நடைபெற உள்ளது

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்ட ஆயர் கலாநிதி யஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பணிப்பாளர் கே.ஜே.பிரெட்லீ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6-33)

# பாடசாலை வகுப்பறை மீது சாய்ந்த அத்திமரம்



(அராலி)

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட, ஜே/401 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள யா/ சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் வகுப்பறை மீது அத்திமரம் சாய்ந்துள்ளது.

எனினும் இந்த அனர்த்தத்தினால் பாரியளவு சேதங்கள் எவையும் ஏற்படவில்லை. குறித்த மரத்தை வெட்டி அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-6-104)


# கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி
# தனியார் பாதுகாப்பு சேவை
# பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல்-2024

1. கரைச்சி பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களுக்கு பாதுகாப்பு சேவையினை (Security Service) பெற்றுக் கொள்ளல் தொடர்பாக அரசுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** - **2023.12.01 - 2023.12.15 பி.ப 02.00 மணிவரை**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி** - **2023.12.18 பி.ப 02.00 மணிவரை**

**கேள்வி திறக்கும் திகதி** - **2023.12.18 பி.ப 02.00 மணி**

2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்
3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.
4. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி மு.ப **9.00** மணி தொடக்கம் பி.ப **14.00** மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா **1,000.00** இனையும், மீளளிக்ககூடிய வைப்புப்பணமாக ரூபா **10,000.00** இனையும் பணமாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவத்தில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு "தலைவர், பெறுகைக்குழு, கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
6. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
7. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக கரைச்சி பிரதேசசபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
9. மேலதிக விபரங்கள் அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | பாதுகாப்பு சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 01 | தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி | **01** | **02** | **01.01.2024** தொடக்கம் **31.12.2024** |
| 02 | வாகன சுத்திகரிப்பு நிலையம் நாகபூசணி அம்மன் வீதி,திருநகர், கிளிநொச்சி | **01** | **01** | |
| 03 | தீயணைப்புப்பிரிவு, A9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி | **01** | **01** | |
| 04 | கிளி சேவைச்சந்தை, கிளிநொச்சி | **02** | - | |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-7770)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 342





"தெரியும், தாயே! ஆனால் தங்களை அந்த மனிதன் ஏமாற்றிவிட்டான் என்பதும் தெரியும். வந்தியத் தேவன் என்னும் பெயருடைய அவ்வாலிபன் உண்மையில் ஓர் ஒற்றன்தான்."

"இல்லவே இல்லை, அவன் காஞ்சிபுரத்திலிருந்து என் தமையன் எழுதிய ஓலையைக் கொண்டு வந்தவன்."

"இளவரசி! அவன் சக்கரவர்த்திக்கும், இளவரசரிடமிருந்து ஓலை கொண்டு வந்தான் அதனால் என்ன? ஒற்றர்கள் இப்படி ஏதாவது ஓர் உபாயத்தைக் கடைப் பிடித்துத் தானே தங்கள் வேலையைச் செய்யவேண்டும்?"

"ஐயா! வந்தியத்தேவன் ஒற்றன் என்பதற்கு ருசு என்ன?"

"அவன் ஒற்றன் இல்லாவிட்டால் இராஜபாட்டையில் நடப்பதை விட்டுக் குறுக்கு வழியில் நடப்பானேன்? குடந்தைச் சோதிடரிடம் போய்ச் சக்கரவர்த்தியின் ஜாதகப் பலனைப் பற்றிக் கேட்பானேன்?"

"சக்கரவர்த்தியின் ஜாதகத்தைப் பற்றி நான்கூடக் குடந்தை சோதிடரிடம் கேட்டேன். அதனால் என்ன?"

"சக்கரவர்த்தியின் செல்வப் புதல்வியாகிய தாங்கள் கேட்பது வேறு. சம்பந்தமில்லாத யாரோ வழிப் போக்கன் கேட்பது வேறு. பகையரசரின் ஒற்றனாயிருந்தால்தான் அப்படி விசாரிக்கத் தோன்றும்."

"இது தங்கள் ஊகம், வேறு காரணம் உண்டா?"

"பகிரங்கமாக என்னுடைய அனுமதி கேட்டுப் பெற்றுக் கொண்டு தஞ்சை கோட்டைக்குள் வந்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் பழுவூர் முத்திரை மோதிரத்தைக் காட்டிவிட்டு ஏன் நுழைய வேண்டும்? பெரிய பழுவேட்டரையர் கொடுத்தார் என்று ஏன் பொய் சொல்ல வேண்டும்?"

"முத்திரை மோதிரம் பின்னே யார் கொடுத்தார்களாம்!"

"அது இன்னும் தெரியவில்லை. கண்டுபிடிக்க வேண்டும்."

"அதைக் கண்டுபிடிக்க முடியாமல் உங்கள் ஆட்கள் என்ன செய்தார்கள்?"

"அம்மணி, என்னுடைய ஆட்கள் மந்திரவாதிகள் அல்ல ஒற்றனைக் கண்டுபிடித்துக் கேட்டுத்தானே முத்திரை மோதிரம் எப்படி அவனிடம் வந்தது என்று தெரிந்து கொள்ள முடியும்?" "அவன் உண்மையைச் சொல்லுவான் என்பது என்ன நிச்சயம்?"

"உண்மையைச் சொல்லும்படி செய்வதற்கு வழிகள் இருக்கின்றன. தாயே! பாதாளச் சிறை இருக்கவே இருக்கிறது. ஒற்றனுக்கு இதுவும் தெரிந்திருக்கிறது. அதனால் தான் மறுபடியும் தலைமறைவாகி இரவுக்கிரவே கோட்டையிலிருந்து தப்பி ஓடிவிட்டான். சம்புவரையர் மகனையும் முதுகில் குத்தி விட்டு ஓடிவிட்டான்!"

"அவன் தான் குத்தியவன் என்பதற்கு என்ன அத்தாட்சி?"

"கந்தன்மாறன் கூறியது தான்."

"அது போதாது! அவன் கந்தன்மாறனைக் குத்தவில்லையென்று நான் சொல்லுகிறேன்!"

"தாயே! தாங்கள் அருகில் இருந்து பார்த்தீர்களா?"

"பார்க்கவில்லை. ஆனால் ஒருவன் முகத்தைப் பார்த்து அவன் குற்றவாளியா, இல்லையா என்பதை என்னால் நிர்ணயிக்க முடியும்."

"அந்தப் பொல்லாத ஒற்றன் பாக்கியசாலி. தங்களுடைய நல்ல அபிப்பிராயத்தை எப்படியோ கவர்ந்துவிட்டான். அந்தப் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லையே?" "ஐயா! அவனை மறுபடியும் ஒற்றன் என்று ஏன் சொல்கிறீர்?"

"தாயே! அவன் ஒற்றன் இல்லாவிட்டால் கூத்தாடிகளுடன் சேர்ந்து முகமூடி போட்டுக் கொண்டு ஏன் பழையாறையில் நுழைகிறான்? மாறுவேடம் போட்டுக் கொண்டு ஏன் கோடிக்கரை துறைமுகத்துக்குப் பிரயாணமாகிறான்? அவன் ஒற்றன் இல்லாவிட்டால் என் ஆட்களைக் கண்டதும் ஒரு நாள் முழுதும் கோடிக்கரையில் ஒளிந்து திரிவானேன்? இரவானதும் படகில் ஏறி இலங்கைத் தீவுக்குப் போவானேன்?"

(தொடரும்...)




# சிறுவர் அரங்கம்

## தண்டனைக்குத் தகுந்த குற்றம்

ஒருநாள் காலையில் அக்பர் தன் அரண்மனை உப்பரிகையில் உலவிக் கொண்டிருக்கையில், அவர் பார்வை நந்தவனத்தின் மீது சென்றது. அது வசந்த காலம் என்பதால் மரங்களும், செடிகளும் வண்ண மலர்களுடன் பூத்துக் குலுங்க, அவற்றிலிருந்து வீசிய நறுமணம் மனத்தைக் கிறங்கச் செய்தது. இளங் காலையில் வீசிய தென்றல்அவர்உடலை இதமாக வருடிச் செல்ல, அவர் காற்றில் மிதப்பதைப் போல் உணர்ந்தார்.

இவ்வாறு தன்னை மறந்த நலையில் உலவிக் கொண்டிருந்த அக்பர், நந்தவனத்தில் நடந்து செல்லும் வழியில் கல் ஒன்று இருப்பதை கவனிக்கத் தவறி விட்டார். அதில் கால் இடறி இடித்துக் கொள்ள, கால் கட்டை விரலிலிருந்து இரத்தம் கசியத்தொடங்கியது. அதுவரை அவர் மனத்தில் பொங்கிய உற்சாகம் கணத்தில் மறைந்து போக, கோபமும், எரிச்சலும் குடி கொள்ள, அவர் "தோட்டக்காரன் எங்கே? எங்கே இருந்தாலும் வா!" என்று கத்தினார். தோட்டக்காரன் மண்வெட்டியை எடுக்கக்



குடிசைக்குள் சென்று இருந்ததால், அக்பரின் கூக்குரல் அவன் காதில் விழவில்லை. கூப்பிட்ட குரலுக்கு தோட்டக்காரன் வராததால், அக்பரின் கோபம் தலைக்கு ஏறியது. அரண்மனையை அடைந்தவுடன் காவல் அதிகாரியை அழைத்தவர், நடந்தவற்றைக் கூறி தோட்டக்காரனை தூக்கிலுடும்படி உத்தர விட்டார்.

காவல் அதிகாரிக்கு அதைக் கேட்டு தூக்கி வாரிப் போட்டது. ஒரு சாதாரணத் தவறுக்கு மரண தண்டனையா என்று அதிர்ந்து போனார். ஆனால் சக்கரவர்த்தி மிகவும் கோபமாக இருந்ததால், அவரிடம் எதுவும் கேட்கத் துணிச்சலின்றி, அவர் பின் வாங்கினார். பின்னர் தன்னுடைய இரு காவலர்களை அழைத்துக் கொண்டு, தோட்டக் காரனை நோக்கிச் சென்றார். காலை நேரத்தில் காவல் அதிகாரி தன் ஆட்களுடன் தன்னைத் தேடி வருவது கண்டு தோட்டக்காரன் திடுக்கிட்டான். "என்ன விஷயம் ஐயா?" என்று நடுங்கும் குரலில் கேட்க, "தோட்டத்தில் சக்கரவர்த்தி உலவும் போது ஒரு கல்லில் அவர் காலை இடித்துக் கொண்டார். அது உன்னுடைய தவறு என்பதால் உனக்கு நாளைக் காலை தூக்கு தண்டனை!" என்றார் அதிகாரி.

இதைக் கேட்டதும் தோட்டக்காரன் துடித்தான். அவன் மனைவியோ அதைக் கேட்டு அலறி அழுதாள். "கால் இடித்துக் கொண்டதற்கு தூக்கு தண்டனையா? இது என்ன அநியாயம்? நீங்கள் சக்கரவர்த்தியிடம் எடுத்துச் சொல்லக் கூடாதா?" என்றாள். "எங்களால் ஒன்றும் செய்ய முடியாது.

உன் கணவன் தோட்டத்தில் விட்டு வைத்த கல் இப்போது அவன் தலையிலேயே விழப் போகிறது" என்ற அதிகாரி சற்று யோசித்த பின், "தூக்குதண்டனை நாளைக்குத் தான், இன்னும் ஒரு நாள் சமயம் உள்ளது. நீ பீர்பாலிடம் போய் உன் கணவனைப் பற்றிக் கூறி விடுவிக்க முயற்சி செய்" என்று சொல்லிவிட்டு, தோட்டக் காரனின் கைகளில் விலங்கு மாட்டி இழுத்துச் சென்றனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த இலட்சியம் உடையவன் பிறர் உயர்வடைய உதவுகிறான்.

– ஹென்றி ஃபோர்டு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்தியாவை சிக்கனப் பிடிப்பதே தமிழர்களுக்கான ஒரே வழி

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளடங்கலாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சமயப் பிரதிநிதிகள் அடங்கலான குழுவொன்று இந்தியாவின் தலைநகர் டில்லிக்குச் சென்றுள்ளது.

புலம்பெயர் நாடுகளில் இயங்கக்கூடிய தமிழ் அமைப்புகளின் ஏற்பாட்டில் டில்லிக்குச் சென்றுள்ள மேற்படி குழுவினரின் இந்தியப் பயணம் தமிழ் மக்களுக்கு ஏதேனும் நன்மை பயக்குமா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் உண்டு.

தவிர, இவர்களின் இந்தியப் பயணம் தமிழ் மக்களிடம் சில பல எதிர்பார்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு இந்தியாவுக்குச் சென்றுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் வெறுமனே பொது அமைப்புகள் ஏற்பாடு செய்த கருத்தமர்வுகளில் கலந்து கொள்வது மட்டும் நமக்கு எந்தப் பயனையும் தரப்போவதில்லை.

மாறாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை தமிழ்ப் பிரதிநிதிகள் சந்திக்க வேண்டும்.

இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துகின்ற களநிலைமைக்களை உருவாக்குவதற்கு இந்தியப் பயணத்தை நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்த வேண்டும்.

ஏனெனில் இந்தியாவுக்கு வாருங்கள். அங்கு சந்திப்போம் என்று பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் உள்ளிட்டவர்களிடம் கூறியிருந்தார்.

எனினும் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்கான எந்த ஏற்பாடுகளையும் சம்பந்தர் தரப்புச் செய்யவில்லை.

ஏன்தான் அவர்கள் பிரதமர் மோடியைச் சந்திப்பதில் தீவிரம் காட்டவில்லை என்ற கேள்வி இன்னமும் பதிலின்றிக் கிடக்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ்ப் பிரதிநிதிகள் குழுவொன்று டில்லிக்குச் சென்றிருப்பது ஒரு திடீர் திருப்பம் எனலாம்.

அதிலும் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன் மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் டில்லிக்குச் சென்றிருப்பது இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகப் பொருள் கொள்ளலாம்.

எதுஎவ்வாறாயினும் ஈழத் தமிழ் மக்களாகிய எமது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக இருந்தால், அது இந்தியாவால் மட்டுமே முடியும்.

அதிலும் தமிழ் மீது பற்றுக் கொண்ட – சைவ சமயத்தின் மீது கருசனை கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் ஆட்சியிலேயே தமிழ் மக்களுக்கு உரிமை கிடைத்தாக வேண்டும்.

எனவே இந்தியாவைச் சிக்கனப் பிடிப்பது மிகவும் அவசியம்.

இதனை யார் உதாசீனம் செய்தாலும் அவர்கள் பிரச்சினை தீர்வதை விரும்பவில்லை என்றே பொருள் கொள்ளப்படும்.

## நாடு கடனில் மூழ்க முறையற்ற அபிவிருத்தி திட்டங்களே காரணம்

### பாராளுமன்றத்தில் நளின் பண்டார

(கொழும்பு)

பாதைகளை அமைப்பதை மாத்திரமே முதன்மை பணியாக சில அரசாங்கங்கள் கொண்டிருந்தமையின் காரணமாகவே நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எமது நாடு கடனில் மூழ்க முறையற்ற சில அபிவிருத்தித் திட்டங்கள் தான் காரணமாகும். மக்களின் தேவைக்கு அல்லாது அரசாங்கத்தின் உயர் மட்டத்தினரின் தேவைக்கே நிதி ஒதுக்கீடுகள் இடம்பெற்று, கடந்த காலங்களில் அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தன்னிச்சையாக வீதிகளை நிர்மாணித்ததன் காரணமாக நாடு வங்குரோத்து நிலைக்கு செல்லும் பாதை உருவானது. சில பாதைகளால் மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படவில்லை.

உலகின் வளர்ந்த நாடுகளைப் போல அதிவேகப் பாதைகளிலுள்ள பற்றுச் சீட்டு வழங்கும் சாவடிகளில் மாற்றுத் திறனாளிகளைப் பணிக்கு அமர்த்த வேண்டும் என்றும் அவர் கூறினார். (ந-7)

## வெப்ப வலய நாடுகள் கடும் நெருக்கடிகளுக்குள்

### சுற்றாடல் அமைச்சர் கெஹலிய

வெப்ப வலய நாடுகள் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"சுற்றுச்சூழல் நிகழ்ச்சி நிரல் தற்போது மாறி வருகின்றது. இன்று உலகிலுள்ள ஒவ்வொரு தளத்திலும் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை பிரதான தலைப்புகளாகும்.

ஆனால் இன்றைய நிலைவரப்படி, சுற்றுச்சூழல் தொடர்பான கலந்துரையாடல் முன்னிலைக்கு வந்துள்ளது.

சுற்றுச்சூழல் பாதிப்புக்கு முக்கிய காரணம் சுற்றுச்சூழல் குறித்து சரியான கவனம் செலுத்தப்படாமையாகும்.

மனிதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் கேடு கணக்கிட முடியாதது.

கைத்தொழில் புரட்சியின் போது சுற்றுச்சூழலில் சரியான கவனம் செலுத்தாததன் விளைவை இன்று அனுபவித்து வருகிறோம்.

2015ஆம் ஆண்டில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் நடைமுறையில் செயற்படுத்தப் படவில்லை.

அதனால் வெப்ப வலய நாடுகள் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

அபிவிருத்தி அடைந்த நாடுகளின் செயற்பாடுகளால் வெப்ப வலய நாடுகள் பாரிய நட்டத்தை சந்தித்துள்ளன.

எனவே சுற்றாடல் பாதிப்புக்கு எதிராக வலுவான சூழலை கட்டமைக்க வேண்டிய அவசியம் தோன்றியுள்ளது என்றார். (ந-7)

## 100 மெ.தொன் சீனி வடக்கிற்கு வருகிறது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சீனி விநியோகத்தினை சீர் செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கில் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதியளவு சீனி இல்லாமல் இருப்பதாக பல நோக்கு கூட்டுறவுச் சங்க வடக்கு மாகாணப் பொது முகாமையாளரினால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

இதுதொடர்பாகத் துறைசார் அமைச்சருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடிய நிலையில், மேலதிகமாக 100 மெற்றிக்தொன் சீனியை வடக்கிற்கு அனுப்புவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சீனியை வடக்கிற்கு மாகாணத்தில் உள்ள 48 பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் ஊடாக நியாயமான விலையில் மக்களுக்கு விநியோகிப்பது தொடர்பான ஆலோசனைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கி உள்ளார். (ந-7,33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை** யாழ். பிரதேசத்தில் பிரிட்டிஷ் கவுன்சில் -ரக்காவீதி, தியாகி அறக்கொடை நிலையம்,கைலாசபிள்ளையார் கோவில், நாவலர் வீதி, இராசாவின் தோட்டம், ரக்காவீதி, கோயில் வீதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** அம்பகாமம்,அம்பகாமம் மொபிட்டல் கோபுரம், டயலொக் கோபுரம்- ஒலுமடு, கற்கிடங்கு, நீதிபுரம், ஒலுமடு, பழம் வேலி வயல் வீதி, பெரிய புளியங்கும் (துட்சை அடம்பன்), புலி மெச்சினாதிகுளம், புதிய நகர் (துட்சை அடம்பன்), தட்சை அடம்பன் (கரிப்பட்ட முறிப்பு) ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## மின்சாரம் தாக்கி தந்தை, மகள் பலி

கண்டி, புசல்லாவையில் சட்டவிரோத மின் கம்பியில் சிக்கி தந்தையும் மகளும் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, உயிரிழந்தவரின் விவசாய நிலத்தில் அமைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மின்சார வேலியில் அவர்கள் சிக்குண்டிருந்த நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டு கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதில் 32 வயதான தந்தையும் 2 வயதும் 8 மாதமுமான மகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக புசல்லாவை பொலிஸார் தெரிவித்தனர். (7)

JSAC

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பெண்களுக்கெதிரான அனைத்து விதமான வன்முறைகளும் மனித உரிமை மீறலாகும்."

16 2023

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?



04

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அவற்றுள் சில தேசத்தின் நேர்மை பலவீனமடைதல், மக்களின் அறியாமை, ஊழலுக்கு எதிராகச் செயற்படுவதற்கு மக்கள் முன்வராமை, ஊழலுக்கு எதிராக ஊடகங்கள் பயன்படாமை, ஊழலுக்கு எதிராகச் செயற்பட மக்கள் அமைப்புக்கள் முன்வராமை, தமது நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல்களை உயர் அதிகாரிகள் பாரதூரமான பிரச்சினையாகக் கருதாமை, ஊழலைத்தடுப்பதற்கு அரச நிறுவனங்கள் மந்தகதியில் செயற்படும் தன்மை, சட்டமுறைமையில் உள்ள பலவீனங்கள், அரசியல் அழுத்தங்கள் மக்களின் மனப்பாங்கு என்ப னவாகும்.

**நாம் அன்றாடம் சந்திக்கும் ஊழல் இடம்பெறும் சந்தர்ப்பங்கள்**

- அரசியல் நியமனங்களைச் செய்யும் போது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் வழங்கப்படும் சந்தர்ப்பங்கள்.
- சோம்பேறித்தனமான அரச சேவை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக வழங்கப்படும் இலஞ்சம்.
- விலைமனுக்கோரல் செயல் முறையில் ஏற்படும் பாரிய ஊழல்கள்.

சட்டத்துக்குப் புறம்பான ஊழல் என்பதன் சரியான பொருள் நாட்டுக்கு நாடு வேறுபடக்கூடும். சில அரசியலுக்கு நிதியளிக்கும் செயற்பாடுகளை சில நாடுகள் ஏற்றுக்கொள்ளும் அதே வேளை வேறு சில நாடுகள் இவற்றை சட்டத்துக்குப் புறம்பானவையாகக் கருதுகின்றன. சில நாடுகளின் அலுவலர்களுக்கு மிக விரிவான அல்லது சரியான முறையில் வரையறுக்கப்படாத அதிகாரங்கள் உள்ளன. இச் சந்தர்ப்பங்களில் சட்டத்துக்கு அமைந்தவை, சட்டத்துக்குப் புறம்பானவை என்பவற்றை வேறுபடுத்தி அறிதல் கடினமானது.

உலகம் முழுவதிலும் இடம்பெறும் கையூட்டு அல்லது இலஞ்சம் வாங்கல், சுமார் 1 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இத்த ஊழல்களினால் ஏற்படும் சுமை மிகவும் வறுமை நாடுகளில் வாழும் அடிமட்ட பில்லியன் மக்களையே கூடுதலாகப் பாதிப்பதாகவும் தெரிய வருகிறது.

பல நிறுவனங்கள் ஊழலை அளவிடுகின்றன. புள்ளிவிபரவியல் துறையைச் சேர்ந்த நிபுணர்கள் மற்றும் கருத்துக்கணிப்புகளின் அடிப்படையில் இந்த தரப்படுத்தல் (ஊழல் புலனாய்வுக் குறியீடு (CPI)) மேற்கொள்ளப்படுகிறது.

**ஊழல் மலிவுச் சுட்டெண்**

ஊழல் மலிவுச் சுட்டெண் (Corruption Perceptions Index) என்பது ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் (Transparency International) என்னும் அமைப்பால் உலக நாடு ளின் ஊழல் நிலையின் மதிப்பீடு ஆகும். ஊழல் என்பது தனிப்பட்ட இலாபத்துக்காக அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவது என்று இந்த அமைப்பு வரையறை செய்கிறது. 2003 இல் இருந்து இந்த அறிக்கை வெளியிடப்படுகிறது.

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் (TI) சர்வதேச நிறுவனத்தினால் தொகுக்கப்பட்ட சமீபத்திய (2022) ஊழல் மதிப்பாய்வுச் சுட்டியானது (CPI) (CORRUPTION PERCEPTIONS INDEX) வெளியிடப்பட்டள்ளது. CPI ஆனது, உலகெங்கிலுமுள்ள 180 நாடுகள் மற்றும் ஆட்சி எல்லைக்குள் இடம்பெறுகின்ற பொதுத்துறை ஊழல்களின் அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றது. இங்கு வழங்கப்பட்ட புள்ளிகளானது நிபுணர்களின் கருத்துக்களையும் வர்த்தக சமூகத்தினரின் கருத்துக் கணிப்புக்களையும் பிரதிபலிக்கிறது.

உலக வங்கி, உலகப் பொருளாதார மன்றம் (WEF), தனியார் இடர் மற்றும் ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள், சிந்தனைக் குழுக்கள் உட்பட 13 வெளிவாரியான தரவுகளை பயன்படுத்தியே CPI மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. CPI மதிப்பாய்வானது அதன் புள்ளி வழங்கும் முறையினை 0 தொடக்கம் 100 வரை வடிவமைத்துள்ளது. 100 புள்ளிகள் என்பது ஊழலற்ற தூய்மையான நிலையினையும் 0 புள்ளி என்பது கூடிய ஊழல் நிலையினையும் குறிப்பிடுகி றது.

**2022இல் இலங்கைக்கு ஊழலில் 101 ஆம் இடம்**

2022 ஆம் ஆண்டிற்கான CPI மதிப்பாய்வில் இலங்கை 36 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இது முன்னைய ஆண்டினை விட ஒரு புள்ளியும் (37) அதற்கு முன்னைய ஆண்டுகளான 2020 - 2017 மற்றும் 2014ஆம் ஆண்டுகளை விட இரண்டு (38) புள்ளிகள் குறைவாகும். 2022ஆம் ஆண்டின் CPI மதிப்பாய்வு புள்ளிகள் அடிப்படையிலான தரவரிசையில் பனாமா, அல்பேனியா, கஸகஸ்தான், செர்பியா, எக்குவடோர், பெரு மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளுடன் இலங்கையானது 101ஆம் இடத்தை பதிவு செய்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் இலங்கையின் CPI மதிப்பாய்வானது ஒப்பீட்டளவில் ஒரே மாதிரியாகவே காணப்பட்ட போதிலும் 2022ஆம் ஆண்டு இலங்கையானது மிகக் குறைந்த புள்ளியினை (36) பதிவு செய்துள்ளது. 2016 ஆம் ஆண்டு பதிவாகிய 36 புள்ளிகள் இவ்வாண்டும் பதிவு செய்துள்ளது. மேலும் 2012 ஆம் ஆண்டு பதிவாகிய 40 புள்ளிகளே இலங்கையின் அதிகபட்ச புள்ளியாக விளங்குகிறது.

2022ஆம் ஆண்டின் CPI மதிப்பாய்வின் நாடுகளின் தரவரிசையில், டென்மார்க் (90), பின்லாந்து (87), நியூசிலாந்து (87) ஆகியன அதிக புள்ளிகளை பதிவு செய்யும் அதே வேளை தென் சூடான் (13), சிரியா (13) மற்றும் சோமாலியா (12) ஆகியன குறைந்த புள்ளிகளுடன் இறுதி நிலைகளில் காணப்படுகின்றன. இலஞ்சம், பொது நிதியின் திசைதிருப்பல், ஊழல் வழக்குகளை திறம்பட விசாரணை செய்யும் தன்மை, போதியளவான சட்டக் கட்டமைப்புகள், தகவலை அணுகுவதற்கான வசதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள், புலனாய்வாளர்கள் மற்றும் முறைக்கேடுகளை வெளிப்படுத்தும் நபர்களின் (whistleblowers) சட்ட ரீதியான பாதுகாப்பு போன்ற விடயங்கள் CPI மதிப்பாய்வில் உள்ளடங்கியுள்ளது.

எந்த நாடும் 100 இற்கு 100 என்ற மதிப்பெண்ணை பெறவில்லை. ஒரு நாட்டில் ஊழலோ அல்லது முறைகேடுகளோ நடைபெறாமல் இருந்தாலும் அந்த நாட்டை சேர்ந்தவர்கள் வெளிநாடுகளில் தொழில் செய்யும்போது அல்லது அந்த நாட்டை சேர்ந்த நிறுவனங்கள் வெளிநாடுகளில் முதலீடு செய்யும்போது அங்கு முறைகேடுகளில் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேயே அந்த நாடுகளுக்கு முழு மதிப்பெண்கள் வழங்கப்படவில்லை.

ஊழலுக்கெதிரான உலக நாடுகளின் செயல்திறனானது எந்தவித முன்னேற்றமும் இன்றி காணப்படுவதாக CPI மதிப்பாய்வினை மேற்கொள்ளும் ஜேர்மனியில் அமைந்துள்ள இந்த (ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல்) அமைப்பு குறிப்பிடுகிறது. உலகின் பெரும்பாலான நாடுகள் ஊழலுக்கெதிரான போராட்டத்தில் தொடர்ந்தும் தோல்வியடைந்து வருகிறது எனவும் கடந்த 2017ஆம் ஆண்டு தொடக்கம் 95 வீதமான நாடுகள் எவ்வித முன்னேற்றமும் அடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என உலகளாவிய அமைப்பான TI அமைப்பு குறிப்பிடுகிறது.

ஊழலை முறையாக எதிர்கொள்வோம் என நாடுகள் கூறினாலும் ஒருசில நாடுகளே அதற்குரிய உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இந்நிலைமையானது பரவலான ஊழலுக்கு வழிவகுக்கும் அதேவேளை சிவில் சமூகத்தின் மீதான ஒடுக்குமுறைகளுக்கு வழிவகுக்கும் என TI அமைப்பானது மேலும் குறிப்பிடுகிறது.

**ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா**

ஊழலுக்கெதிரான செயற்பாடு, சிவில் சமூக ஒடுக்கு முறைகள், எதிர்பார்க்கும் முறைமை மாற்றத்தினை (System Change) உருவாக்க அரசியல் ரீதியான விருப்பமின்மை மற்றும் நாட்டின் பொருளாதாரம் மற்றும் குடிமக்களின் வாழ்வாதாரம் என்பவற்றில் ஊழல்மிக்கவர்களின் ஆட்சியின் விளைவுகள் என்பன தொடர்பில் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா (TISL) நிறுவனமும் தனது தீவிர கரிசனையினை வெளிப்படுத்துகிறது.

நாட்டின் கடனைத் தீர்க்க முடியாத நிலைக்கு இட்டுச் சென்ற பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக நாட்டு மக்கள் ஒன்று சேர்ந்ததை நினைவுகூறுமாறு TISL நிறுவனம் அரசாங்கத்தை வலியுறுத்துகிறது. வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்க அரசாங்கமானது சர்வதேச நாணய நிதியத்தை (IMF) சார்ந்திருக்கிறது. நிதி தொடர்பான வெளிப்படைத்தன்மை, பொது நிதி முகாமைத்துவம் மற்றும் வலுவான ஊழலுக்கு எதிரான சட்ட கட்டமைப்பை அறிமுகப்படுத்தல் போன்றவற்றினூடாக ஊழலுக்கான சாத்தியக்கூறுகளை குறைக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியது.

நாட்டு மக்களின் அடிப்படை அல்லது அத்தியாவசியமான விடயங்களை உறுதி செய்து நாடு மற்றுமொரு ஸ்தம்பித்த அல்லது மந்தமான நிலையினை அடையாமல் இருக்க வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல், சுற்றுலா மேம்பாடு, ஏற்றுமதி மற்றும் பிற வருமானங்களை ஈட்டும் முறைகளை மேம்படுத்தல், கடன் மறுசீரமைப்பு, வெளிநாட்டு உதவி மற்றும் சர்வதேச சமூகத்தின் பிற ஆதரவுகள் என முக்கியமான தேவைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தும் அதேவேளை இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் அரசாங்கம், சட்டக்கட்டமைப்பு மற்றும் பொதுத் துறை மீதான நம்பகத்தன்மையை மீள்நிறுவுதல் என்பன முக்கியமானவையாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் சி.என். சூரியராஜா தெரிவித்தார். (ந-7,33)

## வவுனியாவில்...

மகன் வியாபார நிலையத்தை மூடி விட்டு அண்மையில் உள்ள தனது வீட்டிற்கு சென்றுள்ளார். இதன்போது குறித்த தம்பதியர் வியாபார நிலையத் திற்கு பின்பாகவுள்ள தங்கும் இடத் தில் உறங்கச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் காலை வியாபார நிலையத்தை திறப்பதற்காக வந்த மகன் தனது தாயும் தந்தையும் இரத்த வெள்ளத்தில் கிடந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக செட்டிகுளம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட் டதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற செட்டிகுளம் பொலிஸாரின் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் ஆரம்ப கட்ட விசாரணைகளை முன்னெடுத்த னர்.

சம்பவத்தில் செட்டிகுளம் பகுதியை சேர்ந்த பசுபதிவர்ணகுலசிங்கம் (வயது-72), அவரது மனைவியான கனகலட்சுமி (வயது-68) ஆகியோரே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களது சடலங்களுக்கு அரு கில் மூன்று கத்திகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் குறித்த சம்பவத்தில் 5 பவுண் பெறுமதிமிக்க தங்க நகை ஒன்றும் காணாமல் போயுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த சம்பவம் அதிகாலை இடம்பெற்றிருக்கலாம் என வும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7,250)

## கடன் வழங்கும்...

இதில் இலங்கைக்கு வழங்கப்பட்ட நீடிக் கப்பட்ட கடன் வசதியின் முதலா வது மீளாய்வு, இரண்டாவது கடன் தவ ணையை வெளியிடுவதற்கு வழிவகுக் கும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைத் தூதரகத்தின் தலைவர் பீற்றர் ப்ரூவர் தெரிவித்துள்ளார். (ந-7)

*(இதனுடன் தொடர்புடைய மற்றொரு செய்தி உள்ளே)*

## பொலிஸ்மா...

கோன் மீது ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு குற்றம் சுமத்தியிருந் தது.

அவர் மீது ஒழுக்காற்று நடவ டிக்கை எடுக்க ஆணையம் பரிந்துரை செய்துள்ளது. அப்படிப்பட்ட ஒருவரை தற்காலிக ஐஜிபியாக நியமிப்பது குற் றம்" என கர்தினால் ரஞ்சித் ஆண் டகை தனது விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தென்னக்கோன் மீது வேறு குற்றச் சாட்டுகள் உள்ளன. கடந்த ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி வன்முறையை கட்டுப்படுத்த தவறியமை மற்றும் ஜனாதிபதி மாளிகையில் இருந்து பெறப்பட்ட பணத்தை பொது பாது காப்பு அமைச்சரிடம் ஒப்படைக்குமாறு கோட்டை பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்ததற்கு அவர் எடுத்த நடவடிக் கை என்பனவும் இதில் அடங்கும்.

தேசிய பாதுகாப்புக்குறித்து தென்னக் கோனுக்கு சரியான புரிதல் இல்லை என்பதையே இந்த நடவடிக்கை காட்டு கிறது. இதுபோன்ற சூழ்நிலையில் அவர் பதில் பொலிஸ்மா அதிபராக இருப்பதற்குத் தகுதியற்றவர்" என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

"இந்த நியமனத்தை வழங்குவதற்கு சில அதிகார வெறி கொண்ட குழு ஜனாதிபதியிடம் செல்வாக்கு செலுத்தி யுள்ளது தெளிவாகிறது. ஜனாதிபதி யின் இந்த நடவடிக்கையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் என கர்தினால் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## ரொஷான்...

யாப்பா அபேவர்தன நேற்று பாராளு மன்றத்தில் தெரிவித்தார்.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பாராளு மன்றத்தில் தெரிவித்த கருத்துக்காக அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீதித்துறையை விமர்சனம் செய்த மைக்காக முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க விற்கு எதிராக நேற்று முன்தினம் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய் யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பெற்றோல்...

எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம் ஒக்டேன் 92 ரக பெற்றோல் 10 ரூபாயால் குறைக்கப் பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 346 ரூபாயாகும்.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் 3 ரூபா யால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 426 ரூபாயாகும்.

இதேவேளை ஒட்டோ டீசல் 27 ரூபாயால் குறைவடைந்துள்ளதுடன் அதன் புதிய விலை 329 ரூபாயாகும்.

சுப்பர் டீசல் 3 ரூபாயால் அதிகரிக் கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 434 ரூபாயாகும்.

மண்ணெண்ணெய் 02 ரூபாவால் குறைவடைந்துள்ளதுடன், அதன் புதிய விலை 247 ரூபாயாகும். (ந-7)

## இந்தியாவுக்குப்...

செய்வதை எரிசக்தித் துறை அமைச் சர் கஞ்சன விஜேசேகர உறுதிப்படுத்தி யுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் இலங்கை சந்தையில் நுழைந்த சினோபெக் நிறு வனத்தின் முதலீடுதான் இலங்கைக் கான மிகப்பெரிய வெளிநாட்டு நேரடி முதலீடு என்று கூறப்படுகிறது.

இலங்கையின் இரண்டாவது பெரிய துறைமுகமான அம்பாந்தோட்டை துறைமுகம் 2010 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது . 2017ஆம்ஆண்டு முதல் இலங்கை துறைமுக அதி கார சபை மற்றும் அம்பாந்தோட்டை சர்வதேச துறை முக குழு எனப் படும் சீன வர்த் தக துறைமுகங் களின் கூட்டு முயற்சியின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இத் துறை முகத்தின் கட்டு மான பணிக்கு சீனாவின் எக் ஸிம் வங்கிதான் வணிகக் கடன் வழங்கியது.

இந்நிலையில் தற்போது சீனா 120 ஆயிரம்கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்து ஒட்டு மொத்த உலக நாடுகளை யும் திரும்பி பார் க்க வைத்துள் ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உத வும்வகையில் இந் தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடு களும் இலங்கை யில் முதலீடு செய்து வருகின் றன.

இலங்கை மீதான சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் இந்தியா வின் பிரபல தொழில் நிறுவனமான அதானி குழுமம் கொழும்பில் துறை முக முனைய திட்டத்தை மேற்கொள் கிறது.

இந்நிலையில், இந்தியாவின் அதானி மற்றும் அமெரிக்க நிறுவனங்களுக்கு போட்டியாக இலங்கையில் பெரும் தொகையை சீனா முதலீடு செய்கிறது. (ந-7)

# நவம்பரில் பணவீக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

தேசிய நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் நவம் பர் மாதத்தில் அதிகரித்துள்ளது.

தொகை மதிப்பீடு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் நேற்று வெளி யிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கை யில் இந்த விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய, கடந்த மாதத்தில் 1.5 சதவீதமாக இருந்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் நவம்பர் மாதத்தில் 3.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. (ந-7)

லக்கி 7 VIP
திகதி 2023.11.30
சீட்டிழுப்பு இலக்கம் 140
L 4 9 8 2 4 5 L
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.11.30
சீட்டிழுப்பு இலக்கம் - 1344
O 06 37 49 67 O
12406

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3556
சீட்டிழுப்பு திகதி 30.11.2023
R 12 43 56 79
R 65667
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.30
சீட்டிழுப்பு இலக்கம் 0623
கும்பம் 11 37 50 60 கும்பம்
10057 23

மஹஜன சம்பத
திகதி 2023/11/30
சீட்டிழுப்பு இலக்கம் 5314
M 3 7 9 1 9 4
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 30/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1662
Z 05 12 15 41 72
29896

சனிதா
திகதி 2023.11.30 வெற்றி வாரம் 4449 வர்ணம் சிவப்பு
09 10 26 43 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,420,268.00
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிர் தன சம்பத
திகதி 30.11.2023 வெற்றி வாரம் 022 வர்ணம் ஊதா
C 8 2 4 4 5 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,660,311.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2288 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.11.30 தினம் வியாழக்கிழமை
11 38 47 53 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,960,892/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4000 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.11.30 தினம் வியாழக்கிழமை
17 44 51 59 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,884,088/-
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 33 15 35 46 48
சீட்டிழுப்பு வாரம் 1464
2023.11.30 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 471,522,924.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2114
வர்ணம்: இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2023.11.30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,775,496/-
08 52 64 76 T
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ.20 ஆயிரத்து 576 மில்லியன் பெறுமதியான போதைப்பொருள் மீட்பு

கடற்படை அறிவிப்பு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சுமார் 21 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித் துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் 26 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 20 ஆயிரத்து 576 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் கைப் பற்றப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை குறிப்பிட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில், 715 கிலோ 509 கிராம் ஹெரோயின் கடற்படையினரால் கைப்பற்றப்பட் டதுடன் அதன் பெறுமதி 17 ஆயி ரத்து 887 மில்லியன் ரூபாயா கும்.

அத்தோடு, 3 ஆயிரத்து 641 கிலோ 15 கிராம் கேரள கஞ் சாவும், 50 கிலோ 288 கிராம் உள்ளூர் கஞ்சாவும் கைப்பற் றப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி ஆயி ரத்து 456 மில்லியன் ரூபாய் என கடற்படை தெரிவித்துள்ளது.

அதேநேரம், 10 கிலோ 755 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன் பெறுமதி 95 மில்லி யன் ரூபாயாகும் என குறிப்பி டப்பட்டுள்ளது.

இந்த வருடம் கடற்படை யினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் ஆயி ரத்து 127 மில்லியன் ரூபாய் பெறுமதியான 140 கிலோ 993 கிராம்ஹஷிஸ்போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த போதைப்பொருட்க ளுடன் 14 வெளிநாட்டவர்க ளும் கைது செய்யப்பட்டுள்ள னர்.

இதற்கிடையில், இந்த வருடத்தில் போதைப்பொ ருள் வைத்திருந்தமை மற் றும்வாகனங்களில்கொண்டு சென்ற குற்றச்சாட்டில் 215 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

இதேவேளை வெளிநாட் டவர்களுக்கு சொந்தமான 3 படகுகளும், உள்நாட்டவர் களுக்குச் சொந்தமான 43 படகுகளும் கடற்படையின ரால் கைப்பற்றப்பட்டுள்ள தாக இலங்கை கடற்படை மேலும் தெரிவித்துள்ளது. (ந-7)

# கல்வித்துறையில் மறுசீரமைப்பு அவசியம் - கல்வி அமைச்சு

(கொழும்பு)

கல்வித்துறை மறுசீரமைக்கப்படா விட்டால், மாணவர்கள் உயர் கல்வியை விட்டு விலகி வேறு வழிகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாத விடயமாக மாறிவிடும் என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வித்துறையில் உள்ள அனை வரும் இதனை புரிந்து கொண்டு பொறுப் புடனும், கவனமாகவும் செயற்பட வேண் டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறைந்த வயதிலேயே கல்வி மட்டத் தில் மாணவர்கள் முன்னேறுவதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பது புதிய கல்வி சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் எனக் குறிப்பிட்ட கல்வி அமைச்சர்;

பாடசாலைகளில் பணிபுரியும் அபிவி ருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர்க ளாக உள்வாங்குவதற்கு கல்வி அமைச்சு தயாராகவுள்ளது.

இது தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளதால், அதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. நீதிமன்றத் தீர்ப்புகள் கிடைத்தவுடன் அவர்களை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (ந-7)


பொருளியல் கருத்தரங்கு
A/L - 2023
வளவாளர் - S.JEYAKUMAR
(B.A (Hons) Econ SPI, M.A in Econ, P.G.D.E)
- பரீட்சை எதிர்பார்ப்பு வினாவிடைகள்.
- புள்ளித்திட்ட விளக்கம்
- தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்
- கையேடுகள் வழங்கப்படும்
(18062)
ஆரம்பம் : 05.12.2023 செவ்வாய் பிற்பகல் 2.00 மணி
இடம் : New Science Hall, Jaffna.
வெளிமாணவர்களும் கலந்து கொள்ளமுடியும்.
Zoom செயலி மூலமும் நடைபெறும்.
தொடர்புகளுக்கு
077 723 8597, 076 535 0999, 077 011 9434

S.D Electric Work - கிளிநொச்சி
வீட்டு வயரிங் தொழிற்சாலைக்குரிய three phase வயரிங் panal bord வேலைகள் மற்றும் வீட்டிற்குரிய பைப் லைன் bathroom pitting வேலைகள் சிறந்த முறையில் பொறியியலாளர்களால் முறைப்படி செய்து தரப்படும்.
கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களிலும் எமது சேவை கிடைக்கும்.
(18042)
076 085 8111

Canada and Italy Visa
(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
பணியாளர் தேவை
(18039)
VISA CONSULTANT
134, Adiyapatham Road,Thirunelvely, Jaffna.
077 038 5584

பல ஆயிரம் கடந்த பதிவுகள்
பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்
உங்கள் கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=
தொடர்புகளுக்கு :-
கல்யாண மாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kalyanamalai.jaffna@gmail.com

விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.
(18039)
Lanka Cargo Worldwide Express
பணியாளர் தேவை
இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
070 375 0002

கணித பாட ஆசிரியர் தேவை
வடமராட்சியில் நெல்லியடிப் பகுதியில் வசிக்கும் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவர் ஒருவருக்கு பிரத்தியேகமாக கணிதம் கற்பிக்கக்கூடிய ஆசிரியர் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
076 097 3124

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள்
(C-7771)
V2 TRAVELS
வயது :-30 வயதிற்குட்பட்டோர்
சம்பளம் - 30'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

CANADA VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7771)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

வெளிநாட்டு வேலை விசா ஆலோசனை
Foreign Employment Work Permit Consulting
கனடா மற்றும் அவுஸ்திரேலியா உட்பட நாடுகளில் வேலை விசா பெறுவதற்கான ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படும்.
அரச, தனியார் துறைகளில் வேலை செய்வோரும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைத் தேடுவோரும் விண்ணப்பிக்கலாம்.
(C-7769)
தொடர்பிற்கு யாழ்ப்பாணம், வவுனியா
077 557 4190


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.171, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org